



# ஹர ஹர சங்கரா

FREE COPY
March - 2025
Vol. 4 - ISSUE 05



# KODAMBAKKAM TIMES

# புராணங்கள் உண்மையா? கட்டுக்கதையா?

## -- பெரியவா

ராமாயணம் உள்ளிட்ட புராணங்கள், இதிகாசங்கள் உண்மையில் நடக்காமல் பொய்யாக கூட இருக்கட்டும். அதற்காக ஸ்ரீராமர் சரித்திரமோ, மற்ற கதைகளோ மதிப்பிழந்து போய் விடுமா? அதன் மூலம் நாம் பெறும் படிப்பினை குறைந்து விடுமா? கோயிலில் பக்தி ஏற்படுகிறது. துக்கத்தை போக்கி அருள் சுரக்கிறது என்றால் அது தான் கோயில்கள் அமைக்கப்பட்டதன் பலன். அதை விட்டு விட்டு, கோயிலை எப்போ கட்டினார்கள்? யார் கட்டினார்கள் என தேடிக்கொண்டிருப்பதில் என்ன அர்த்தம் என தெய்வத்தின் குரல் நூலில் காஞ்சி மகா பெரியவா குறிப்பிடுகிறார்.



புராணங்களை நம்ப முடியாது, அவை வெறும் கட்டுக்கதைகள் என பலரும் சொல்வதுண்டு. இதற்கு காரணம் நாம் பார்க்கிற யதார்த்த நிலவரங்களுக்கு வேறான விஷயங்கள் இருப்பதால் அவற்றை நம்ப மறுக்கிறோம் என தெய்வத்தின் குரல் நூலில் காஞ்சி மகா பெரியவா குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுகையில், தேவர்கள் வந்தார்கள், தவம் செய்தார்கள், தெய்வங்கள் வரம் கொடுத்தன, பூமிக்கு வந்தன, பெண்ணை கல்லாக்கினார்கள், கல் பெண்ணாக மாறியது என இந்த காலத்தில் நடக்காததால் புரளி என்று தோன்றுகிறது. அதிலும் சூரியனை உதிக்காமல் நிறுத்துவதெல்லாம் நம் சக்திக்கு முடியாததால் வெறும் கட்டுக்கதை என நினைக்க தோன்றுகிறது.

**புராணங்கள் உண்மையா?**

இந்த காலத்தில் முடியவில்லை, இந்த காலத்தில் நடக்கவில்லை என்பதற்காக எந்த காலத்திலும் நடக்காது, முடியாது என நாம் எப்படி சொல்லி விட முடியும்? வேதமந்திர சக்தி, உயர்ந்த தவம், யோக அனுஷ்டானம் ஆகியன முந்தைய காலத்தில் இருந்துள்ளதற்கு பல புத்தகங்கள் ஆதாரமாக உள்ளன. இதனால்

தேவசக்திகளெல்லாம் இந்த லோகத்தினராலேயே எளிதில் உணர முடிந்தது. வெளிச்சம் இருந்தால் கூடவே நிழலும் இருக்கும். அதே போல் தேவசக்திகளை போலவே அசுர சக்திகளும் இருந்து கொண்டு தான் உள்ளன விஞ்ஞானமே சொல்கிறது.

தேவ, அசுர வதம் இப்போதும் நன்மை, தீமை இடையேயான போராட்டமாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அந்த காலத்தில் இந்த சக்திகளை தபம்செய்த சக்திகளை கொண்டு கண்களால் உணர முடிந்தது. இப்போதும் மனிதர்களின் கண்ணுக்கு புலப்படாத மர்ம சக்திகள், ஒலி, ஒளி அலைகள் நம்மை சுற்றி உள்ளதாக விஞ்ஞானமும் சொல்கிறது. இதற்கும் ஒரு படி மேலே போய் நல்ல தேவதைகள், துர்தேவதைகள் உள்ளன என்பதையும் விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது அதற்கு பிறகும் நம்ப முடியாது என எப்படி சொல்ல முடியும்.

**எல்லாம் கட்டுக்கதையா? புராணங்கள் மீது சந்தேகம் :** அதிகமான விஷயங்களை வரலாறுகளாக ஏற்றுக் கொள்வதில்லை. பல்லவ மன்னனும், பாண்டிய மன்னனும் ஜைனமதத்தைவிட்டு சைவத்திற்கு மாறியதற்கு எந்த எழுத்துப்பூர்வ ஆதாரங்களும் இல்லை தான். அதனால் மாறியது இல்லை என்று ஆகிவிடுமா, ஏதாவது காரணம் இல்லாமல், அல்லது ஏதாவது பெரிய விஷயம் நடக்காமல் இரு பெரும் ராஜாக்களும் தங்களின் எண்ணங்களை மாற்றிக் கொண்டிருக்க முடியுமா?

ஒரு காலத்தில் பெரிய உருவத்திலான மனிதர்கள், விலங்குகள் இருந்ததாக எலும்புகள், படிமங்கள் கண்டெடுக்கப்படுகின்றன. இதையே புராணங்களும் சொல்கின்றன. பூர்வ ஜென்மங்கள் பற்றி புராணங்கள் சொன்னால் நாம் சந்தேகிக்கிறோம். ஆனால் அதே விஷயம் செய்திதாள்களில் வந்தால் உண்மை என்று நம்புகிறோம். புராணங்களில் சிலவை கற்பனையாக இருக்கலாம். பிற்காலத்தில் வந்தவர்களின் இடை செருகல்களாக இருக்கலாம். அதற்காக அதில் குறிப்பிட்ட அனைத்தும் பொய், கற்பனை, கட்டுக்கதை என்று ஆகி விடாதே.

**நோக்கம் நிறைவேறியதா, அது தானே முக்கியம் :** ராமாயணம் உள்ளிட்ட புராணங்கள், இதிகாசங்கள் உண்மையில் நடக்காமல் பொய்யாகக் கூட இருக்கட்டும். அதற்காக ஸ்ரீராமர் சரித்திரமோ, மற்ற கதைகளோ மதிப்பிழந்து போய் விடுமா? அதன் மூலம் நாம் பெறும் படிப்பினை குறைந்து விடுமா? கோயிலில் பக்தி ஏற்படுகிறது. துக்கத்தை போக்கி அருள் சுரக்கிறது என்றால் அது தான் கோயில்கள் அமைக்கப்பட்டதன் பலன். அதை விட்டு விட்டு, கோயிலை எப்போ கட்டினார்கள்? யார் கட்டினார்கள் என தேடிக்கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்.

புராணங்களின் நோக்கம் நமது மன அழுக்கை, சித்த மலத்தை போக்குவதற்காகவே இயற்றப்பட்டன. அதை மனதில் வைத்து பயபக்தியோடு படித்தால் அதற்குரிய பலன் கிடைக்கும். ஆட்சேபங்களுக்கும், சந்தேகங்களுக்கும் இடம் இருக்காது. ஆராய்ச்சி, விஞ்ஞானம் என சொல்லிவிட்டால் அதன் பெயரால் என்ன சொன்னாலும் நம்பி விடுவதுதான் மூடநம்பிக்கை.

புராணம் கற்பனையாக இருந்தாலும் கூட நல்லது செய்தவன் வாழ்ந்தான், கெட்டது செய்தவன் அழிந்தான். கெட்டவர்களையும் பல சந்தர்ப்பங்களில் இறைவன் கை தூக்கி விட்டிருக்கிறான் என்பதே நமது மனதில் அழுத்தமாக பதிப்பிப்பதற்கான நோக்கம் நிறைவேறுகிறது. அது தானே முக்கியம் என நீண்ட விளக்கம் மூலமாக பதிலளிக்கிறார் காஞ்சி மகாபெரியவா.

# அல்லூரி வெங்கடாத்ரி சுவாமிகள்

தமிழ்நாட்டின் இசை மும்மூர்த்திகளான ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் மற்றும் ஸ்ரீ ஷ்யாமா சாஸ்திரிகளைப் போலவே, ஆந்திராவில் அதன் புகழ்பெற்ற மூன்று இறை இசை மேதைகளை கொண்டுள்ளது தலப்பாக்கம் அன்னமாச்சார்யா, பத்ராசலம் ராமதாசர் மற்றும் அல்லூரி வெங்கடாத்ரி சுவாமிகள்.

1300 களில் மாலிக்காபூர், 1700 களில் பிரெஞ்ச் மற்றும் ஹைதர் அலி அவன் மகன் திப்பு எல்லாரும் தமிழகத்தில் எல்லா திவ்ய தேசங்களிலும் கோவில்களை கொள்ளை கொண்டனர். பல கோவில் செல்வங்கள் மறைந்து வைத்து காலத்தால் மறந்து போயின.



அல்லூரி வெங்கடாத்ரி சுவாமிகள் பக்தி ரசத்துடன் பாட்டு பாடிக்கொண்டு இருந்தவரை இறைவன் தடுத்து ஆட்கொண்டார். ஸ்ரீரங்கத்தில், காஞ்சிபுரத்தில், சென்னை பார்த்தசாரதி பெருமாள் சாற்றி கொண்டு இருக்கும் பல, பல அழகிய ஆபரணங்கள், ஸ்ரீரங்கம் பாண்டியன் கொண்டை, காஞ்சி ஸ்ரீ வரதராஜர் சுவாமி வைர கொண்டை போன்றவை இவரது சிறப்பான பணிகள்.

ஒரு சாமியார் எப்படி இவ்வளவு செல்வத்தை சேர்த்தார் என்றால் அவருக்கு யார், யார் கேட்டால் பணம் தருவார் என்று பெருமாளே கனவில் சொல்லுவாராம்.

சேதமடைந்த முந்தைய விலைமதிப்பற்ற மற்றும் பாண்டியன் கிரீடத்தை புதியதாக மாற்றும்படி கனவில் நமது சுவாமிக்கு இறைவன் உத்தரவிட்டார்.

பாண்டியன் கிரீடம் தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்ட அவர், தினமும் குறைந்தபட்சம் ரூ 10/- வசூல் கிடைக்காவிட்டால் பட்டினி கிடப்பேன் என்று சபதம் எடுத்தார். வசூல் இல்லாத சந்தர்ப்பங்களில், "டேர் ஹவுஸ்" வெங்கடசாமி நாயுடு, புதுச்சேரி அப்பாசாமி நாயுடு போன்ற அவரது தீவிர பக்தர்கள் முன்வந்து ரூ 10/- கொடுத்தனர். நிதி தொடர்ந்து சேகரிக்கப்பட்டதால், பாண்டியன் கிரீடத்திற்கான பணிகளும் முன்னேறின.

**அரங்கனின் சிறப்பு :** கிரீடத்தை அலங்கரிக்க ஒரு அங்குல சதுர மரகதக் கல் தேவைப்பட்டது. சுவாமி அதைப் பெற தீவிரமாக முயற்சித்தபோது இறைவன் அவரது கனவில் தோன்றி, தேவையான மரகதம் கொல்கத்தாவின் மாதவ சேத் என்ற வைர வியாபாரியின் இல்லத்தில் வடக்கு மூலையில் உள்ள இரும்புப்

பெட்டகத்தில் இருப்பதாகக் கூறினார்.

ஸ்ரீ வெங்கடாத்ரி சுவாமிக்கு கனவுச் செய்தியில் அந்த ஸ்ரீ மாதவ சேத்துக்கு அனுப்பும்படி சுவாமியின் பக்தர் காசிதாஸ் சௌகார் நண்பர் அவர் என்று அவர் மூலம் உடனடியாக மாதவ சேத்துக்கு ஒரு வேண்டுகோள் எழுத நம்பெருமாள் ஆணையிட்டார்.

மாதவ சேத் கடிதத்தை கண்ட பின் சொன்னபடி மரகதத்தை பெட்டியில் தேடி கண்டுபிடித்தபோது ஆச்சரியப்பட்டார் அதை அவரது குடும்ப உறுப்பினர்களுக்குக் கூடத் தெரியாமல் அவரது இறந்து போன தந்தை வைத்திருந்தார் மேலும் அதை சென்னைக்கு தனது பங்களிப்பான ரூ 1,000 உடன் அனுப்பினார்.

கிரீடம் செய்யும் வேலையில் இருந்த பேராசை கொண்ட பொற்கொல்லன் மரகதத்தை எடுத்துக்கொண்டு ஒரு சாதாரண கல்லை மாற்றி வைத்தான். சுவாமியின் கனவில் இறைவன் தோன்றி அந்தக் குறும்புத்தனத்தை வெளிப்படுத்தினான். பின்னர் சுவாமி தனது சீடர்களை பொற்கொல்லனிடம் அழைத்துச் சென்றார், அவர் முதலில் மறுத்துவிட்டார், ஸ்ரீ வெங்கடாத்ரி சுவாமியின் பக்தரான அப்பாசாமி ராஜூ அவரைத் தாக்கியபோது மன்னிப்பு கேட்டு மரகதத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

பாண்டிய கிரீடம் இவ்வாறு முடிக்கப்பட்டு, அவரது சீடர்களுடன் திருவரங்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கோயிலைச் சுற்றி சடங்கு ஊர்வலத்திற்குப் பிறகு, ருத்ரோத்கரி வருடம் (1863) மார்கழி மாத பரமபத ஏகாதசியின் புனித நிகழ்வில் அது நம்பெருமாளுக்கு வழங்கப்பட்டது.

இன்று நம்பெருமாள் மற்றும் தாயார் சந்நிதிகளில் இருவருக்கும் ஸ்வாமிகள் கைங்கரியமாக செய்து வைத்த நகைகளை பாண்டியன் கொண்டை மட்டுமே சாற்றி வைப்பார்கள் அவ்வளவு நகைகள் இருக்கும். வெங்கடாத்திரி ஸ்வாமிகள் ஒரு சாமியார் பட்டினி இருந்து பத்து, பத்து ரூபாய் பிச்சை எடுத்து செய்த நகைகள் அவை.

சிறப்பான ஒரு சேவை அரசர்கள் செய்ய முடியாத பொன் ஆபரணங்களை சென்னை, காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம் பெருமாளுக்கு அள்ளி செய்ய ஸ்ரீமன் நாராயணன்

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

அந்த வைகுண்டத்தில் இருந்து இந்திரன் போல ஒருவரை அனுப்பி இருக்கிறார்.

அவரது புகழ்பெற்ற பார்வையாளர்களில் ஒருவர், அப்போதைய சென்னை ஆளுநரான லார்ட்பிரான்சிஸ் நேப்பியர் (1866 - 1872), அவர் ஸ்வாமிகளின் மகத்துவத்தைப் பற்றி அறிந்து திருச்சிக்கு வந்தபோது ஸ்ரீரங்கத்தில் அவரை மரியாதையுடன் சந்தித்தார்.

தாது வருடம் (1877) திங்கட்கிழமை நள்ளிரவில் மாசி சப்தமி திதியின் போது, தெய்வீக அஷ்டாசக்ஷரி மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே அரங்கன் அடி சேர்ந்தார்.

# அரவணை மணி

ஸ்ரீரங்கம் கிளி மண்டபத்தில் இந்தப் பெரிய மணியைப் பார்த்திருப்பீர்கள். இந்த மணிக்கு "அரவணை மணி" என்று பெயர்.

எப்போதும் ரங்கவிமானம் என்னும் ப்ரணவாகார விமானத்தை பார்த்தபடி இந்த மணி தொங்கிக் கொண்டிருக்கிறது.

பெருமாள் சன்னதியில் அரையர் சுவாமிகள் பாசுரங்கள் பாடும்போது, கையில் குழித்தாளம் என்ற இசைக் கருவியைத் தாளத்துக்காக வைத்திருப்பார்கள்.




வலது கையில் இருக்கும் தாளத்துக்குப் பெயர் நம்மாழ்வார், மற்றொரு தாளத்தின் பெயர் நாதமுனிகள்.

நம்மாழ்வார் தாளத்தை கொண்டு, நாதமுனிகளின் தாளத்தைத் தட்டுவார்கள். நம்மாழ்வார் ஆசார்யனாக இருந்து நாதமுனிகளுக்கு உபதேசம் செய்வது என்று ஐதீகம்.

ஸ்ரீராமானுஜர் காலத்தில் ஸ்ரீரங்கத்தில் கீழ உத்திர வீதி முழுவதும் 700 அரையர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அதனாலேயே அந்த வீதிக்கு "செந்தமிழ் பாடுவார் வீதி" என்று பெயர்.

தற்போது, இரண்டு குடும்பம் மட்டுமே அரையர் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த அரையர்களின் தாளங்களை ஒரு மணியாகச் செய்தார்கள். அதுதான் கிளி மண்டபத்தை அலங்கரிக்கிறது.

அந்த 700 அரையர் சுவாமிகளும் பிரணவாகார விமானத்தை பார்த்தபடி மணி வடிவில் இருக்கிறார்கள்.




"ராமர் பட்டாபிஷேக" தபால் கார்டு 1936 -மோகன்ராஜ்.Kr

**1936 ஆம் ஆண்டு "ராமர் பட்டாபிஷேகம்" படம் அச்சிட்டு வெளியிடப்பட்ட தபால் கார்டு.**

# காஞ்சிபுரத்தில் மலைக்கோயில்

காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாள் (தேவராஜன்) கோயில் இருக்கிறது அதை மலைக்கோயில் என்றுதான் பெரும்பாலாநோர் சொல்வார்கள். "ஹஸ்திகிரி"யில் வாசம் செய்பவர் "ஹஸ்திகிரிநாதர் அவருக்கு இப்படி ஒரு பெயர். வரதருக்கு வருஷத்தில் ஏறக்குறைய முந்நூறு நாள்கள் உற்சவம் நடைபெறும். அந்தக் கோயிலில் உண்மையில் அவர் ராஜாதான் திருவிழா என்றால் அப்படி ஒரு கோலாகலம்.



காஞ்சிபுரத்தில் மூன்று "டை"கள் ரொம்ப பிரசித்தம் நடை, வடை, குடை.

**நடை :** வரதராஜர் பல்லக்கு அல்லது வாகனத்தில் பவனி வரும்போது அந்த நடை கண்கொள்ளாக்காட்சி, பல்லக்கு வாகனம் தூக்குபவர்களுக்கு அவ்வளவு பயிற்சி. யுத்த வீரர்கள் நடையில் மிடுக்கு இருப்பதைப் போல, பல்லக்குத் தூக்கிகள் நடையில் தெய்வீகமான அழகு பார்த்துப், பார்த்து ரசிக்கத்தக்கதாக

இருக்கும்.

**வடை :** அடுத்தது காஞ்சிபுரம் மிளகு வடை, காஞ்சிபுரம் இட்லி நாக்கு படைத்தவர்களுக்குப் பரமானந்த விருந்து. காஞ்சிபுரம் மிளகு வடை பல நாள்கள் கெட்டுப்போகாமல் இருக்கும்.

**குடை :** காஞ்சிபுரத்தில்தான் கோயில்களுக்கான குடை தயாரிப்பவர்கள் பல பேர் ஆண்டாண்டுக் காலமாக இருந்து வருகிறார்கள். குடையிலும் பல தினுசுகள், பலவகைகள். சின்னக் குடையிலிருந்து மிகப் பெரிய, மிகவும் அழகான கை வேலைப்பாடுகள் செய்யப்பட்ட குடைகள் வரை தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் பல கோயில்களுக்கு மட்டுமில்லாமல் வெளிநாடுகளுக்கும் குடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**கோடிகள் :** மூன்று "டை"கள் போலவே மூன்று "கோடி"கள் காஞ்சிபுரத்தில் இருக்கின்றன காமாட்சியம்மன் கோயில் விமானத்துக்கு **"காமகோடி"** விமானம் என்று பெயர், ஏகாம்பரேஸ்வரர் விமானம் **"ருத்ரகோடி"** விமானம், வரதராஜர் கோயில் விமானம் **"புண்யகோடி"** விமானம். இவ்வளவு நுட்பமான தகவல்களையும் கூறியவர் மகா பெரியவாள். பரம்பரை பரம்பரையாகக் காஞ்சிபுரத்தில் வசித்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கூட இந்த செய்தித் துளிகள் தெரிந்திருக்காது. பெரியவாளிடம் **"சூக்ஷ்மங்கள்"** அதிகம்.

# 36 முறை கந்த சஷ்டி கவசம் சொன்னால் என்ன நடக்கும்

கந்த சஷ்டி கவசத்தை எழுதியவர் பால தேவராய ஸ்வாமிகள். இவர் புகழ்பெற்ற சென்னிமலை முருகன் கோவிலில் வைத்து முருகனுக்குரிய இந்த முக்கிய பாடலை இயற்றினார். இன்று உலகம் முழுவதும் கோவில்களில் கந்த சஷ்டி கவசம் ஒலிக்காத இடமே இல்லை. சூலமங்களம் சகோதரிகள் குரலில் எங்கும் இந்த பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட கந்த சஷ்டி கவசத்தின் பாடல் வரிகளில்
ஒரு நாள் முப்பத்தாறுரு கொண்டு ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய அஷ்டதிக்குள்ளோர் அடங்கிலும் வசமாய்த் என்ற வரிகள் வரும்.

இந்த கந்த சஷ்டி கவத்தை 36 முறை சொல்லிவிட்டு விபூதி தரித்து முருகனை நினைத்து வணங்கினால் மிகப்பெரும் சக்தி கிடைக்கும் என ஆன்மீக பெரியவர்களால் சொல்லப்படுகிறது.

கந்த சஷ்டிக் கவசத்தை தினமும் 36 முறை எளிமையாக சொல்வது எப்படி?

சரவணபவ என்கிற முருகனின் அட்சரம் பற்றி அறிந்திடாத சில தகவல்கள் : முருகன் இரண்டு வடிவங்களில் நமக்கு காட்சியளிக்கிறார். 1 ஒருமுகம், 2 சண்முகம் (6 முகம்) இதில் ஒருமுகம் கொண்டவர் சுப்ரமணிய சுவாமி ஆவார்.

இவர் வள்ளி தெய்வானையுடன் ஒருமுகத்தோடு அருள்பாலிக்கிறார். அவருடைய அட்சரம்தான் "சரவணபவ" என்பதாகும். அதேபோல ஆறுமுகம் கொண்டவரை சண்முகம் என்று சொல்வார்கள்.

இந்த ஆறுமுகம் கொண்ட கடவுளின் அட்சரம் : சரவணபவ, ரவணபவச, வணபவசர, ணபவசரவ, பவசரவண, வசரவணப. ஆறுமுகம் கொண்ட இந்த சண்முகநாதரை எதற்காக வழிபடலாம்? வெற்றி, வீரம், பராக்கிரமம், ஜாதகத்தில் 6ம் இடத்தை சரி செய்து கொள்வதற்கு இந்த சண்முக கடவுளை வழிபடுவது உத்தமம் ஆகும். இந்த சண்முகக் கடவுளுக்கு ஒரு சக்கரம் உள்ளது. இது 36 அட்சரங்களைக் கொண்டதாகும். ஏனெனில் முருகனின் பெயரை சடாட்சரன் என்றுதான் சொல்வார்கள். அட்சரம் என்றால் எழுத்து. ஆறுஅட்சரங்களுக்கு உரியவரே முருகன்.



இந்த அட்சரங்களில் 36 அட்சரங்களைக் (எழுத்துக்களை) கொண்ட எந்திரங்கள் எங்கிருக்கிறது என்றால் இரண்டு கோவில்களில் உள்ளது.

அதில் ஒரு கோவில் திருப்போரூர். இது முருகன் போர்புரிந்த தலமாகும். இந்த தலத்திலே முருகனுக்கு தனிப்பட்ட முறையில் சக்கரம் ஒன்று உள்ளது. நோய் நொடிகளில் இருந்து விடுபட 36 அட்சரங்களைக் (எழுத்துக்களை) கொண்ட இந்த எந்திரசக்கரத்திற்கு நீங்கள் அபிஷேகம் செய்து பலன் பெறலாம்.

அதில் மற்றொரு 36 அட்சரங்களைக் (எழுத்துக்களை) கொண்ட எந்திரம் உள்ள கோவில் மதுராந்தகம் பக்கம் பெரும்பேர் கண்டிகை என்ற ஊர். அந்த ஊரில் சிறிய குன்று இருக்கும். அதன்மேல் முருகன் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். அதன் தலவிருட்சம் ருத்ராட்சம் ஆகும். உடல் ஆரோக்கியம் பெறுவதற்கு சத்ரு சம்ஹார ஹோமம் செய்யலாம். இந்த ஹோமத்தில் மலர்கள் ஆறு, தருக்கள் ஆறு, விதைகள் ஆறு போன்ற பொருட்கள் எண்ணிக்கை ஆறு கொண்டதாகப் பயன்படுத்தப்படுகிறது. இதையே கந்தசஷ்டி கவசத்தில் "ஒருநாள் முப்பத்தாறுரு கொண்டு ஓதியே செபித்து உகந்து நீறணிய அஷ்டதிக்குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்" என்ற வரிகளில் வருகிறது.

ஆனால் இந்த அவசர உலகத்தில் 36 முறை தினமும் சொல்ல முடியுமா? முடியாதவர்களுக்கு பாம்பன் சுவாமிகள் கூறிய ஒரு எளிய வழியான சரவணபவ, ரவணபவச, வணபவசர, ணபவசரவ, பவசரவண, வசரவணப என்கிற 36 அட்சரங்களை 36 முறை ஜெபித்து விட்டு, கந்தசஷ்டி கவசத்தை ஜெபித்தால் கந்த சஷ்டி கவசத்தை 36 தடவை ஜெபித்த முழுபலன் கிடைக்கும் என்று சொல்கிறார்.

# சிதம்பரம் ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் பற்றிய தகவல்கள்

சித் சபையின் உள்ளே சிவகாம சுந்தரிக்கு இடப்பக்கமாய் மேற்கே பார்த்துக் கொண்டு ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் இருக்கிறார். எல்லாச் சிவன் கோவில்களிலும் பைரவருக்குத் தனிச் சன்னிதி உண்டு. ஆனால் இங்கேயோ நடராஜரின் பக்கத்திலேயே இருக்கிறார். இவருடைய வாகனமான நாய் ஆனது சிவனிற்குக் குடை பிடிக்கும், கணங்களில் ஒருவரான குண்டோதரனின் மறு பிறவி எனச் சொல்லப்படுகிறது. நடராஜருக்கு நடக்கும் கால பூஜையில் ஒருமுறை இவருக்கும் அபிஷேகம், ஆராதனை செய்யப்படுகிறது.

நடராஜ தரிசனத்துக்கும், சிதம்பர ரகசிய தரிசனத்துக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் இவருடைய தரிசனத்துக்கும் கொடுக்கப்படுகிறது. எல்லாச் சிவன் கோவில்களிலும் காலபைரவர் தான் காவல் தெய்வம். சிவனால் நியமிக்கப் பட்ட இவர் சிவனின் அவதாரங்களில் ஒன்றாகவே கருதப்படுகிறார்.



முன்னாட்களில் கோவிலைப் பூட்டிச் சாவியைக் கால பைரவர் சன்னிதியில் வைத்துவிட்டுப் போய்விடுவார்கள் எனச் சொல்லப்படுகிறது. சிதம்பரம் கோவிலிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன் தினசரி பூஜை முடிந்ததும், இரவில் காலபைரவர் சந்நிதியில் அன்றைய பூஜை செய்யும் தீட்சிதர் ஒரு தாமிரத் தட்டை வைத்து விட்டு வருவார் எனவும், காலையில் அது தங்கமாய் மாறி இருக்கும் எனவும் நம்பப்படுகிறது.

அந்தத் தங்கத் தட்டை வைத்துக் கொண்டுதான் தீட்சிதர்கள் தங்கள் வாழ்நாள் செலவிற்கு வழி பார்த்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த செவிவழிச் செய்திகளால்தான் இந்த பைரவருக்கு "ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர்" என்ற பெயரும் ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். இந்த வழிபாடு எப்போது நின்றது என்று தெறியாது. இந்த பைரவர் "ஷேத்திர பாலகர்" எனவும் சொல்லப்படுகிறார்.

சிவனின் அம்சமாய்ச் சொல்லப்படும் இவரே ஆணவத்துடன் இருந்த

பிரம்மாவின் தலையைக் கொய்தார் எனவும் சொல்லப்படுகின்றது. இவரைப் பிரார்த்தித்தால் தீராத கடன்கள் தீரும் என்றும் சொல்கின்றனர். காசிமாநகரின் க்ஷேத்திர பாலகர் பைரவர் தான். காசி நகர் முழுதும் அவரே காவல் காக்கின்றார் என்பது ஐதீகம்.

காசி யாத்திரை மேற்கொள்ளுபவர்கள் கடைசியில் பைரவர் கோயிலுக்குச் சென்று அவரைத் தரிசித்து அங்கே காசிக்கயிறு பெற்றுக் கொண்டு பின்னரே திரும்ப வேண்டும் என்றும், பைரவரை தரிசனம் செய்யாமல் யாத்திரை நிறைவேறாது எனவும் ஐதீகம்.

பைரவர் நிர்வாணமாய் நாயுடன் காவல் காக்கும் கோலத்தில் இருப்பார். எப்போதும் சிரித்த முகம். ஆனால் துஷ்டர்களைத் தண்டிக்கவும் தண்டிப்பார். தண்டனை கடுமையாகவே கொடுப்பார் என்றும் சொல்லுவார்கள்.

இரவு வேளைகளில் கோயிலின் பிராஹாரத்தை பைரவரே தன் துணையான நாயுடன் சுற்றி வந்து காவல் காப்பார் என்றும் நம்பப்படுகின்றது. பைரவர்களிலேயே பட்டீஸ்வரம் கோயிலின் பைரவர் நிஜமான ஒரு மனிதன் போலவே பார்த்தால் ஒரு கணம் சட்டுனு மனதில் திடுக்கிட்டுப் போகும் வண்ணம் ஜீவனுடன் விளங்குகின்றார்.

**ஸ்ரீ காலபைரவ பஞ்சரத்னம் :**

கட்கம் கபாலம் டமருகம் த்ரிசூலம்
ஹஸ்தாம்புஜே ஸ்ந்நதம் த்ரிணேத்ரம்
திகம்பரம் பஸ்ம விபூஷிதாங்கம்
நமாம்யஹம் பைரவமிந்துசூடம்

கவித்வதம் ஸத்வரமேவ மோதான்
நதாலேய ஸம்பு மனோபிராமம்
நமாமி யானீக்ருத ஸார மேயம்
பவாப்தி பாரம் கம்யந்த மாஸ

ஜராதி துக்கௌக விபேத தக்ஷம்
விராகி சமஸேவ்ய பாதாரவிந்தம்
நரபதிபத்வ ப்ரதமாஸ நந்த்ரே
ஸராதிபம் பைரவ மானதோஸ்மி

ஸமாதி ஸம்பத் ப்ரதமான தேப்யோ
ரமா தவாத்யாசித பாதபத்மம்
ஸமாதி நிஷ்டை ஸ்தரஸாதிகம்யம்
நமாம்யஹம் பைரவமாதிநாதம்

கிராமகம்யம் மனஸாபி தூரம்
சராசாஸ்ய ப்ரபாவதி ஹேதும
கராக்ஷிபச் சூன்ய மாதாபிரம்யம்
பராவரம் பைரவமான தோஸ்மி

# அபிஷேக பலன்கள்



இறைவனை ஆராதிக்க பல விதமான வழிபாட்டு முறைகள் இருந்தாலும் அவற்றில் முதல் உபச்சாரமானதும், விரைவில் பலன் தரும் முறையானதும் அபிஷேக வழிபாட்டு முறையாகும். அம்மனுக்கு செய்யப்படும் ஒவ்வொரு வகை அபிஷேகத்திற்கும் ஒவ்வொரு விதமான பலன்கள் உண்டு அவை :

1. **தூய்மையான நீர்** - காரிய சித்தி உண்டாகும்
2. **வாசனை திரவியம்** - ஆயுள் விருத்தி
3. **சந்தனம்** - அஷ்ட ஐஸ்வர்யம்
4. **தேன்** - இனிய குரல் வளம் மற்றும் இனிமையான வாழ்வு
5. **சந்தனாதி தைலம்** - இறையுணர்வு
6. **பால்** - ஆயுள் விருத்தி
7. **தயிர்** - வம்ச விருத்தி
8. **நெய்** - வாழ்வில் மோட்சம்
9. **இளநீர்** - குழந்தை செல்வம்
10. **அன்னம்** - ஆயுள், ஆரோக்கியம்
11. **பஞ்சாமிர்தம்** - உடல் நலம் மற்றும் செல்வ வளம்
12. **பசும்பால்** - ஆயுள் அதிகரிக்க
13. **மாம் பொடி** - கடன் நீங்க
14. **எலுமிச்சை** - நோய் நிவாரணமும், அகால மரணத்தையும் நிவர்த்தி செய்ய
15. **கரும்புச்சாறு** - பிணிகள் நீங்கி ஆரோக்கிய வாழ்வளிக்க
16. **பச்சை கற்பூரம்** - பயம் நீங்கி மனதில் அமைதி உண்டாக
17. **கோரோசனை** - தீர்க்கஆயுள்
18. **வாழைப்பழம்** - பயிர் விருத்தி
19. **பஞ்ச கவ்யம் (பால், தயிர், நெய், சாணம், கோமியம்)** - பாவங்கள் நீங்கி ஆன்மசுத்தி உண்டாக்கும்

இவ்வாறு அம்மனுக்குரிய அபிஷேக வழிபாட்டினைச் செய்து அருள் பெறுவோம்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# பைரவருக்கு எட்டு படை வீடுகள்

பைரவரின் எட்டு படைவீடுகளுக்கு அட்ட வீரட்டானங்கள் என்று பெயர். பைரவர் வீரதீரச் செயல்கள் புரிந்த இடங்களாக இருப்பதால் இவை இந்தப் பெயர்கள் பெற்றன.

**1. திருக்கண்டியூர் :**

இத்திருத்தலம் தஞ்சை திருவையாறு சாலையில் திருவையாற்றிற்கு மிக அருகில் அமைந்திருக்கிறது. இத்திருத்தலம் ஆதி வில்வாரண்யம் என அழைக்கப்படுகிறது. இறைவனின் திருநாமம் பிரம்மசிரகண்டீஸ்வரர். பிரம்மனின் அகந்தையை அழித்து அருள் கொடுத்த இடம். இத்தலத்திற்கு வந்து பக்தியோடு வழிபாடு செய்தால் மறுபிறவியில்லை. திருமணத்தடை நீக்கும் பரிகார ஸ்தலமாக விளங்குகிறது. இந்தக் கோவிலின் சுற்றுப்பிரகாரத்தில் வடமேற்குத் திசையில் பைரவரின் தனி சன்னதி உள்ளது.



**2. திருக்கோவிலூர் :**

திருக்கோவிலூர் கோவல்நகர் வீரட்டம், திருக்கோவிலூர் நகருக்குள்ளேயே தென்பெண்ணை நதி தீரத்தில் அமைந்துள்ளது. இறைவனின் திருநாமம் அந்தகாசுர சம்ஹார மூர்த்தி. அன்னை சிவானந்தவல்லி என்ற பெரிய நாயகி. ஆலயத்தில் ஈசானிய மூலையில் பைரவர் தனி சன்னதியில் அருள் பாலிக்கிறார். இங்குள்ள மஹாகணபதி சன்னதியில் தான் ஸ்ரீமஹா கணபதியின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வையார் விநாயகர் அகவலை அருளினார்.


ASTROLOGY
VASTU CONSULTANT
PERFECT VASTU FOR HOME FACTORY OFFICE. MANY CLIENTS BENEFITTED WITH VASTU PREDICTIONS WITH US. ONLY WITH APPOINTMENT
94441 64859

ஸ்ரீராஜராஜசோழன் ஸ்ரீ கருவூரார் சித்தரின் அருளின் படி பைரவரை வணங்கி ஈடில்லாத புகழ் பெற்றார்.

**3. திருவதிகை :**

பண்ருட்டியிலிருந்து ஒரு கி.மீ.தூரத்தில் அமைந்துள்ள திருத்தலம் இது. இறைவனின் திருநாமம் வீரட்டாநேஸ்வரர். ஈசானிய மூலையில் இங்கு பைரவர் எழுந்தருளியுள்ளார். திரிபுரர் எரித்த இடம் இதுவே. வித்யுமாலி, தாரகாசுரன், கமலாசஷன் ஆகிய அசுரர்களை அழித்த இடம் இது. சுந்தரமூர்த்திநாயனார் திருவடி தீட்சை பெற்ற இடம் இது. சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு திரும்பிய திருநாவுக்கரசரின் தீராத குன்ம வியாதியை நீக்கி தடுத்தாண்ட தலம் இது.

**4. திருப்பறியலூர் :**

மாயவரம் திருக்கடையூர் சாலையில் 8 கி.மீ. தூரத்தில் செம்பொனார் கோவில் இருக்கிறது. இந்த செம்பொனார் கோவிலில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் திருப்பறியலூர் இருக்கிறது. சுவாமியின் திருநாமம் வீரட்டேஸ்வரர். அம்பாளின் பெயர் இளங்கொம்பனையாள். அகந்தை கொண்ட தட்சனை அழித்த இடம் இது. தட்சன் யாகம் செய்த இடமே தற்சமயம் கோவிலின் குளமாக இருக்கிறது.

**5. திருவிற்குடி :**

திருவாரூர் நாகூர் சாலையில் திருப்பயந்தங்குடியிலிருந்து பிரிந்து 2 கி.மீ. தூரம் சென்றால் திருவிற்குடியை அடையலாம். மேற்கு நோக்கிய திருக்கோவிலாக இது அமைந்திருக்கிறது. இந்தக் கோவிலின் இறைவனின் திருநாமம் ஸ்ரீஜலந்தராசுரவத மூர்த்தி. திருமால் சுதர்ஸன சக்கரம் வேண்டி இறைவனுக்கு துளசியால் அர்ச்சித்து அருளையும், சுதர்ஸன சக்கரத்தையும் பெற்றார். எனவே இங்கு சிவபெருமான் வடிவில் இருக்கும் பைரவருக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படுகிறது. இங்கு திருமால் தனது தேவியான லட்சுமியோடு இருக்கிறார்.

**6. வழுவூர் :**

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் சாலையில் 8 கி.மீ. தூரம் சென்றதும் வலப்புறம் திரும்ப வேண்டும் அங்கிருந்து அரை கி.மீ. தூரத்தில் இருப்பது வழுவூர் ஆகும். இறைவன் கிருத்திவாஸர் என்ற திருநாமத்தோடு அருள்பாலித்துவருகிறார். அகங்காரத்துடன் தான் என்ற அகந்தையில் இருந்த முனிவர்களின் ஆணவத்தை அழித்து திருக்காட்சி கொடுத்து அவர்களுக்கு ஞானச் செல்வம் தந்தருளும் இடம் இது. ஸ்ரீஜயப்பன் அவதரித்த இடமும் இதுவே. இங்கு ஈசான மூலையில் பைரவர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு அருகிலேயே சனீஸ்வரர் அமர்ந்திருக்கிறார்.

**7. திருக்குறுக்கை :**

மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு சாலையில் கொண்டல் என்ற இடம் வந்ததும் பிரிந்து செல்ல வேண்டும். அங்கிருந்து 3 கி.மீ. சென்றால் திருக்குறுக்கை வரும். இறைவனின் திருநாமம் வீரட்டேஸ்வரர். இறைவியின் திருநாமம் ஞானாம்பிகை ஆகும். காமனை எரித்த இடம் இதுவே.

**8. திருக்கடவூர் :**

திருக்கடவூர் என்ற தலம் ஆதியில் வில்வாரண்யம் என்ற பெயரில் விளங்கியது. அமிர்தகடேஸ்வரர், அபிராமி என்ற பெயர்களில் அப்பனும், அம்மையாகவும் அருள்பாலித்து வருகின்றனர். எமனை சம்ஹாரம் செய்து மார்க்கண்டேயரைக் காத்தருளிய இடம் இதுவே.

# KRISHNA DELISH COFFEE

KRISHNA DELISH COFFEE
GREAT TASTE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்
## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

* Condition Apply

## நம்ம ஆத்து காபி
## FILTER COFFEE RS. 20 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
82 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ்
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com

ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com